பெற்றோரே/பாதுகாவலர்களே,

மே மாதத்தில் கூறப்பட்டிருந்தவாறு, நேரில் கற்றலையா அல்லது மெய்நிகர் கற்றலையா 2021-22 பாடசாலை ஆண்டுக்குத் தெரிவுசெய்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும் தெரிவுசெய்யும் படிவத்தைப் பூர்த்திசெய்யும்படி அனைத்து குடும்பத்தவர்களையும் ரொறன்ரோ கல்விச் சபை (TDSB) கேட்கும்.

ரொறன்ரோவில் COVID-19 தொற்றுக்கள் தொடர்ந்து கடந்த பல வாரங்களாகக் குறைவடைந்து கொண்டிருக்கின்றன, அத்துடன், வளர்ந்தவர்களும் 12-17 வயதுடைய பிள்ளைகளும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டுவதை நாங்கள் பார்க்கிறோம். இது உற்சாகம் தரும் ஒரு செய்தியாகும், அத்துடன் செப்ரெம்பரில் மாணவர்கள் அனைவரையும்  மீளவும் அவர்களின் பாடசாலைகளுடன் இணைப்பதையும்,  நேரில் அவர்களை வரவேற்பதையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

தேவையானபோது, மெய்நிகர் கற்றலுக்கான கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் அதேவேளையில், நேரில் கற்றலைத் தெரிந்தெடுக்கும்படி அனைத்து மாணவர்களையும் நாங்கள் வலுவாக ஊக்குவிக்கிறோம். தாங்கள் எப்போது சிறப்பாகக் கற்கிறார்கள் என மாணவர்கள் நினைக்கிறார்கள் என்பது பற்றிய எங்களின் TDSB தரவுகள் மற்றும் நேரில் கற்றலுக்குத் திரும்பும் மாணவர்கள் தொடர்பாகக் கிடைத்திருக்கும் தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையில், சவாலாக இருந்துகொண்டிருக்கும் இந்த ஆண்டின் பின்னர் இதுதான் மாணவர்களுக்குச் சிறந்த தெரிவென்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

நேரில் கற்றலை அல்லது மெய்நிகர் வழிக் கற்றலைத் தெரிவுசெய்யும் படிவத்தைக் குடும்பத்தவர்கள் **ஆகஸ்ட் 5 வியாழன் முதல் ஆகஸ்ட் 12 வியாழன் வரை** இணையத்தில் பூர்த்திசெய்யலாம்.

**ஆகஸ்ட் 5 வியாழக்கிழமை** அன்று தெரிவுசெய்யும் படிவத்துக்கான இணைப்பு ஒன்றுடன் மின்னஞ்சல் ஒன்று அனுப்பப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு ஒவ்வொரு மாணவருக்குமான தனித்தனி மின்னஞ்சலும்

தனித்தனி இணைப்பும் கிடைக்கும். வழங்கப்பட்ட இணைப்பைப் பயன்படுத்தித் தெரிவுசெய்யும் படிவத்தைக் குடும்பத்தவர்கள் பூர்த்திசெய்ய வேண்டும்.

TDSBஇல் உள்ள கோப்பில் மின்னஞ்சல் முகவரி இல்லாதவர்களுக்கு ஆகஸ்ட் 10ம் திகதிக்கும் 12ம் திகதிக்கும் இடையில் தெரிவுசெய்யும் படிவத்தைப் பூர்த்திசெய்வதற்கான தொலைபேசி அழைப்புக் கிடைக்கும். பூர்த்திசெய்யப்பட்ட தெரிவுப் படிவம் ஆகஸ்ட் 12க்குள் எங்களுக்குக் கிடைக்காவிட்டால் நேரில் கற்கும் வகுப்புக்களில் மாணவர்கள் பதிவுசெய்யப்படுவார்கள்.

பாடசாலை ஆண்டினைச் சுமுகமாக ஆரம்பிப்பதற்கு நாங்கள் ஒன்றுசேர்ந்து தயாராகும்போது நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றி.

மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள் www.tdsb.on.ca/School-Year-2021-22/2021-22-Selection-Form.